कृषि एवं किसान कल्याण मंत्रालय
MINISTRY OF AGRICULTURE AND FARMERS WELFARE

ग्रामीण विकास मंत्रालय
भारत सरकार
MINISTRY OF RURAL DEVELOPMENT
GOVERNMENT OF INDIA

# இயற்கை வேளாண்மையில் பயன்படுத்தும் பொருள்கள்




## தேசியஅங்கக மற்றும் இயற்கை வேளாண் மையம்

ஹாபூர் ரோடு, கம்லா நேரு நகர், காஜியாபாத் -2

☎ 0120-2764212; 2764906; நகல் 0120-2764901

மின்னஞ்சல் : nbdc@nic.in

## இயற்கை வேளாண்மையில் எந்தந்த பொருள்கள் பயன்படுத்தப்படுகிறது ?

# பீஜாமிர்தம்




- **தேவையான பொருள்கள்**
- தண்ணீர் - 20 லிட்டர்
- மாட்டு சாணம் - 5 கிலோ
- மாட்டு கோமியம் - 5 லிட்டர்
- சுண்ணாம்பு - 50 கிராம்
- வரப்பு மண் - ஒரு கை அளவு

- **தயாரிப்பு முறை**

a. 5கிலோ நாட்டு மாடு சாணத்தை துணியில் கட்ட வேண்டும்.

b. 20 லிட்டர் வாளியை எடுத்து கொண்டு அதில் துணியில் கட்டிய மாட்டு சாணத்தை வைக்க வேண்டும்.

c. 12 முதல் 16 மணிநேரம் வாளியில் அப்படியே வைப்பதன் மூலம் மாட்டு சாணம் சாறு வாளியில் இறங்கும்.

d. 50 கிராம் சுண்ணாம்பு எடுத்து வேறு ஒரு வாளியில் 1 லிட்டர் தண்ணிரில் கலக்கவேண்டும்.

e. இரண்டு வாளியில் உள்ள கரைசலை கலந்து ஒரு கை பிடி அளவு நிலத்தடி மண்ணை சேர்க்க வேண்டும்.

a. பின்பு 5 லிட்டர் கோமியம் கலந்து 8-12 மணி நேரம் அப்படியே வைக்கவேண்டும்.

b. பின்பு விதை நேர்த்தி செய்ய பயன்படுத்தலாம்.

- **எப்படி பயன்படுத்துவது**

எந்தப் பயிரின் விதைகளிலும் பீஜாமிர்தத்தைச் சேர்க்கவும்; அவற்றை பூசவும், கையால் கலக்கவும்; அவற்றை நன்கு உலர்த்தி விதைப்பதற்கு பயன்படுத்தவும். பருப்பு வகை விதைகளுக்கு, மெல்லிய விதை பூச்சுகள் இருந்தால், அவற்றை விரைவாக நனைத்து உலர விடவும்



## பயன்கள்

அ. விதையின் வீரியத்தை அதிகரிக்கிறது

ஆ. விதை சார்ந்த நோய்களை தடுக்கிறது

# ஜீவாமிர்தம்




- **தேவையான பொருள்கள்**
  - தண்ணீர் - 200 லிட்டர்
  - மாட்டு சாணம் - 10 கிலோ
  - மாட்டு கோமியம் - 10 லிட்டர்
  - நாட்டு வெல்லம் - 2 கிலோ
  - பயிறு மாவு - 2 கிலோ
  - வயல் மண் - ஒரு கை பிடி அளவு

**தயாரிப்பு**

- அ. ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணிரை பேரலில் எடுத்து கொள்ள வேண்டும்.

ஆ. அதில் 10 லிட்டர் மாட்டு கோமியத்தை கலக்கவேண்டும்.

இ. 10 கிலோ மாட்டு சாணத்தை கரைத்து ஊற்ற வேண்டும்.

ஈ. 2 கிலோ வெல்லத்தை கரைத்து ஊற்ற வேண்டும்.

உ. 2 கிலோ பயிறு மாவை கரைத்து உற்ற வேண்டும் (கடலை மாவை அதிகம் பயன்படுத்தலாம்).

ஊ. வயல் மண்ணை ஒரு கை பிடி அளவு எடுத்து பேரலில் போட வேண்டும்.

எஅனைத்து பொருள்களை சேர்த்து குச்சி வைத்து கடிகார கலக்க வேண்டும்

ஏ. பேரலை ஈர சாக்கு கொண்டு மூட வேண்டும்.

ஐ. நிழல் உள்ள பகுதியில் வைத்து 48 மணி நேரம் கழித்து பயன்படுத்தலாம்.



- **பயன்படுத்தும் முறைகள்**

a. தெளிப்பு முறைகளில் பயன்படுத்தலாம்

b. நீர் பாசன முறையில் பயன்படுத்தலாம்

- **பயன்கள்**

அ. வளர்ச்சியையும் பூப்பதையும் ஊக்குவித்தல் உடன் விளைச்சல் ஊக்குவிப்பானக உதவுகிறது (@5-10% கரைசலை நீரில் கலந்து பயன்படுத்தலாம்).

ஆ . மண் வளம் மேம்பாடு (நீர் பாசன முறை வழியாக)

# கன ஜீவாமிர்தம்















- **தேவையான பொருள்கள்**

  அ. மாட்டு சாணம் - 100 கிலோ

  ஆ. மாட்டு கோமியம் - தேவையான அளவு

  இ. நாட்டு வெல்லம் - 1 கிலோ

  ஈ. பயிறு மாவு - 2 கிலோ

  உ. வயல் மண் - ஒரு கை பிடி அளவு

- **தயாரிப்பு முறை**

  அ.100 கிலோ உலர்ந்த மாட்டு சாணத்தை நிலத்தில் சமமாக பரப்பிவிட வேண்டும்.

  ஆ.சிறிய அளவு மாட்டு கோமியத்தை சேர்க்க வேண்டும்.

  இ. 1 கிலோ பயிறு மாவை சேர்க்க வேண்டும்.

  ஈ. 2 கிலோ வெல்லத்தை சேர்க்க வேண்டும்.

  உ. கை பிடி அளவு நிலத்தடி மண்ணை சேர்க்க வேண்டும்.

  இவை அனைத்தும் ஒன்றாக சேர்ந்து கலந்து பந்து வடிவில் உருட்ட வேண்டும்.

  ஊ. உருட்டிய பிறகு காய வைக்க வேண்டும்.

  எ. உலர வைத்த பிறகு சேமித்து வைக்க வேண்டும்.

  ஏ .உலர்ந்த கன ஜீவாமிர்தததை 6மாதம் வரை பயன்படுத்தலாம்.


- **பயன்படுத்தும் முறைகள்**


  100 கிலோ உலர்ந்த கன ஜீவாமிர்தததை விதை விதைக்கும் போது நிலத்தில் பரப்பி விடலாம்.

- **பயன்கள்**

  மண்ணில் நுண்ணுயிர் செயல்பாட்டை அதிகரிப்பதன் மூலம் பருமனான கரிம உரங்களை விரைவாக சிதைத்து ஊட்டச்சத்துக்கள் கிடைப்பதை மேம்படுத்துகிறது.







# நீமாஸ்திரம்




- தேவையான பொருள்கள்

அ . வேப்ப இலை - 5 கிலோ
ஆ. மாட்டு கோமியம்- 5 லிட்டர்
இ. மாட்டு சாணம் - 1 கிலோ
ஈ. தண்ணீர் - 100 லிட்டர்

**தயாரிப்பு முறை**

அ. அரைத்த வேப்ப இலை அல்லது உலர்ந்த இலை / நசுக்கிய வேப்ப விதைகளை ஐந்துகிலோ எடுத்து கொள்ள வேண்டும்.

ஆ. இவை அனைத்தும் 100 லிட்டர் நீரில் கலக்கவேண்டும்.

இ. 5 லிட்டர் மாட்டு கோமியத்தில் ஒரு கிலோ மாட்டு சாணத்தை கரைக்க வேண்டும்.

ஈ. குச்சியை வைத்து நன்கு கலக்கிய பிறகு மூடி வைக்க வேண்டும்.


உ. தினம் மூன்று முறை கலக்கி விட வேண்டும். 48 மணி நேரம் கழித்து துணியில் வடிகட்ட வேண்டும்

- **பயன்படுத்தும் முறை**

2-3 % கரைசலை நீரில் கரைத்து பயன்படுத்தலாம்

- **பயன்கள்**

இலை சாறு உறுஞ்சும் பூச்சிகள் மற்றும் சிறிய கம்பளி பூச்சிகளை கட்டுபடுத்த பயன்படுத்தலாம் .



# பிரம்மாஸ்திரம்




- **தேவையான பொருள்கள்**

  அ. வேப்ப இலை - 3 கிலோ
  ஆ. புங்க இலை - 2 கிலோ
  இ. சீதாப்பழ இலை - 2 கிலோ
  ஈ. பப்பாளி இலை - 2 கிலோ
  உ. கொய்யா இலை - 2 கிலோ
  ஊ.மாட்டு கோமியம் - 10 லிட்டர்

- **தயாரிப்பு முறை**

  அ.10 லிட்டர் மாட்டு கோமியத்தை எடுத்து கொள்ள வேண்டும்.
  ஆ.03 கிலோ அரைத்த வேப்ப இலையை சேர்க்க வேண்டும்
  இ.02 கிலோ அரைத்த புங்கை இலையை சேர்க்க வேண்டும்.
  ஈ.02 கிலோ சீதா பழ மர இலையை அரைத்து சேர்க்க வேண்டும்.
  உ.02 கிலோ அரைத்த பப்பாளி இலையை சேர்க்க வேண்டும்.
  ஊ.02 கிலோ அரைத்த கொய்யா இலையை சேர்க்க வேண்டும்.
  எ.இவையெல்லாம் சேர்த்து கரைத்து மாட்டு கோமியம் சேர்த்து கொதிக்க வைக்க வேண்டும்.
  ஏ.3-4 கொதிக்க வைத்த பிறகு இறக்கி வைக்க வேண்டும்.
  ஐ.48 மணி நேரம் கழித்து துணியில் வடிகட்ட வேண்டும்.
  ஒ. வடிகட்டிய பிறகு செடிகளில் தெளிக்கலாம்.

- **பயன்படுத்தும் முறை**

  2-3 % கரைசலை நீரில் கலந்து பயன்படுத்தலாம்.

- **பயன்கள்**

  சாறு உறிஞ்சும் பூச்சிகள் மற்றும் காய் துளைப்பான் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த பயன்படுகிறது .

# அக்னியாஸ்திரம்




- **தேவையான பொருள்கள்**

  அ .வேப்ப மர இலை - 5 கிலோ
  ஆ.பச்சை மிளகாய் - 0.5 கிலோ
  இ. பூண்டு - 0.5 கிலோ
  ஈ. மாட்டு கோமியம் - 20 லிட்டர்

## தயாரிப்பு முறை

அ.20 லிட்டர் மாட்டு கோமியத்தை எடுத்துக் கொள்ள வேண்டும்
ஆ.அதில் 05 கிலோ நன்கு அரைத்த வேப்ப மர இலையை சேர்க்க வேண்டும்.
இ.பின்பு 0.5 கிலோ அரைத்த பச்சை மிளகாயை சேர்க்க வேண்டும்.
ஈ.பின்பு 0.5 கிலோ அரைத்த பூண்டை சேர்க்க வேண்டும்.
உ.மேற்கூறிய அனைத்து பொருள்களை நன்கு கலக்கிய பின் கொதிக்க வைக்க வேண்டும்.
ஊ.3-4 முறை கொதிக்க வைத்த பிறகு இறக்கி வைக்க வேண்டும்.
எ.48 மணி நேரம் ஆற வைத்த பிறகு துணியில் வடிகட்ட வேண்டும்.
ஏ. வடிகட்டிய பிறகு செடிகளில் தெளிக்கலாம்.

## எப்படி பயன்படுத்துவது

2-3% கரைசலை நீரில் கலந்து பயன்படுத்தலாம்.

- **பயன்கள்**

மரத்தின் தண்டுகள் அல்லது பட்டைகளில் வாழும் பூச்சிகளுக்கு, அனைத்து வகையான பெரிய காய்ப்புழுக்கள் மற்றும் கம்பளிப்பூச்சிகளை கட்டுபடுத்த பயன்படுகிறது.



# தாஷ்பர்ணி




## தேவையான பொருள்கள்

1. அரைத்த வேப்ப இலை - 5 கிலோ
2. நொச்சி இலை - 2 கிலோ
3. ஆடு தின்னாப்பாலை இலை - 2 கிலோ
4. பப்பாளி இலை - 2 கிலோ
5. சீந்தில் கொடி இலை - 2 கிலோ
6. சீதாப் பழ இலை - 2 கிலோ
7. புங்க மர இலை - 2 கிலோ
8. ஆமணக்கு இலை - 2 கிலோ
9. அரளி இலை - 2 கிலோ
10. எருக்க செடி இலை - 2 கிலோ
11. அரைத்த பச்சை மிளகாய் - 2 கிலோ
12 அரைத்த பூண்டு - 250 கிராம்
13. மாட்டு சாணம் - 3 கிலோ
14. மாட்டு கோமியம் - 5 லிட்டர்

- **தயாரிப்பு முறை**

அ. 200 லிட்டர் தண்ணீரை எடுத்து கொள்ள வேண்டும்
ஆ. மேலே சொல்லப்பட்ட அனைத்து பொருள்களை நீரில் கலக்கவேண்டும்
இ. ஒரு மாதம் கழித்து நொதித்த பின்பு துணியில் வடிகட்ட வேண்டும்.
ஈ. வடிகட்டிய பிறகு செடிகளில் தெளிக்கலாம்.

- **எப்படி பயன்படுத்துவது**

2-3% கரைசலை நீரில் கலந்து பயன்படுத்தலாம்

- **பயன்கள்:**

அனைத்து விதமான சாறு உறுஞ்சும் பூச்சிகள் மற்றும் கம்பளி பூச்சிகளை கட்டுபடுத்த பயன்படுத்தலாம்.

